# அத்தியாயம் 13
# புவியியல் அம்சங்களை வரைபடத்தில் சரியான அமைவிடத்தில் குறித்துக் காட்டுதல்

புவியியலில் முக்கியமான இடங்கள், பிரதேசங்கள் மற்றும் உலகின் பௌதிக, பொருளாதார, கலாசார அம்சங்களுடன் தொடர்புடைய தகவல்களை உலகப் புறவுருவ தேசப்படத்தில் குறித்துப் பெயரிடும் திறமை புவியியலைக் கற்போருக்கு இருக்க வேண்டும். புவியியல் பாடத்தின் கணிப்பீட்டுச் செயற்பாட்டில் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுதல் சம்பந்தமாக வினாக்கள் தயாரிக்கப்பட்டு ''உமது திறனை வெளிப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுதல் சம்பந்தமான நுட்பத்திறனை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் தேசப்படத்தில் குறித்தல் பயிற்சிகள் இன்றியமையாததாகும்.

## உலக தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகள்

### அகலக் கோடுகள்

மத்திய கோடு, கடகக் கோடு, மகரக்கோடு, ஆக்டிக்வட்டம், அந்தாட்டிக் வட்டம் என்பன முக்கிய அகலக்கோடுகளாகும்.

### நெடுங் கோடுகள்

கிறீன்வீச் நெடுங்கோடு ($0^0$ நெடுங்கோடு) மேற்கு $90^0$ நெடுங்கோடு, கிழக்கு $80^0$ நெடுங்கோடு, $180^0$ நெடுங்கோடு

### பௌதிக அம்சங்கள்

| | | |
|---|---|---|
| பிரதான மலைத்தொடர் | - | றொக்கி, அந்தீஸ், இமாலயம், யூரல், காக்கசஸ் ஆகியன. |
| மேட்டு நிலம் | - | தக்கண, திபெத், மொங்கோலிய மேட்டுநிலங்கள் |
| பிளவு பள்ளத்தாக்கு | - | றைன் நதிப் பிளவுபள்ளத்தாக்கு |
| ஏரிகள் | - | சுப்பீரியர், மிக்சிக்கன், ஹியூரன், ஈரி, ஒன்ராரியோ, தங்கனிக்கா, லடோஹா |
| பிரதான நதிகள் | - | மிசூரிமிசிசிப்பி, அமேசன், நைல் கொங்கோ, நைகர், சாம்பசி, மறேடாலிங், டான்யூப், றைன் போநதி, கங்கைநதி, சிந்து நதி, நர்மதா, தப்தி ஆறுகள் |
| கடல் | - | மத்தியதரைக்கடல், கரீபியன் கடல், வடகடல், யப்பான் கடல், சாக்கடல், வெண்கடல், பண்டா க்கடல் ஆகியன. |

### கரையோர அம்சங்கள்

| | | |
|---|---|---|
| சமுத்திர மலைத்தொடர் | - | மத்திய அத்திலாந்திக் சமுத்திர மலைத்தொடர், கார்ல்ஸ் பேர்க் மலைத்தொடர், தென்மத்திய அத்திலாந்திக் மலைத்தொடர் அத்திலாந்திக்-இந்திய மலைத்தொடர் |
| சமுத்திர அகழிகள் | - | மரியானா, மிண்டானோ, ஜாவா அகழி |
| நீரோட்டங்கள் | - | அகுல்காஸ், பெங்குவலா, கம்போல்ட், குரோஷிவோ, குடா நீரோட்டம், கலிபோர்ணியா நீரோட்டம் |
| விரிகுடா/ குடாநாடு | - | பிஸ்கோ, பனாமா, காப்பன்ரேரியா, ஹட்சன், வங்காளாவிரிகுடா |
| தீபகற்பம் | - | கம்சட்கா, பால்க்கன், ஜபீரியன், யுகட்டான், சினாய் |
| நீரிணை (தொடுகடல்) | - | ஜிப்ரோல்டர், மலாக்கா, பேரிங், பாக்கு, மகலன், குக், டோரஸ், டேவிஸ், டென்மார்க் ஆகிய தொடுகடலகள் |
| காலநிலைப் பிரதேசங்கள் | - | வெப்ப பாலைவனம் - அயன மழைக் காலநிலை குளிர்பாலைவனம் - துந்திராக் காலநிலை, பருவக்காற்றுக் காலநிலை, |
| இயற்கைத் தாவரங்கள் | - | அயன மழைக்காடுகள், இடைவெப்ப வலயக் காடுகள், ஊசியிலைக் காடுகள், சவன்னா புல்வெளி, இடைவெப்ப வலயக் காடுகள். |
| விவசாய பிரதேசங்கள் | - | இடைவெப்பவலய விவசாய பிரதேசங்கள், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கோதுமை வளரும் கரை, அவுஸ்ரேலியாவின் பாற்பண்ணைப் பிரதேசம். |
| கைத்தொழில் பிரதேசங்கள் | - | உலகின் இரும்பு உருக்குக் கைத்தொழில் பிரதேசங்கள், கனிய எண்ணெய் உற்பத்திப் பிரதேசம், இலத்திரனியல் கைத்தொழில் பிரதேசங்கள். புதிதாக கைத்தொழில் மயமான பிரதேசங்கள். |
| சனத்தொகை தொடர்பான தகவல்கள் | - | கால ரீதியான முக்கிய நிகழ்வுகள் தொடர்பாகக் கவனஞ் வெலுத்துவது முக்கியம் ஆகும். புவி நடுக்கம், மண்சரிவு,வெள்ளப்பெருக்கு மற்றும் உலக |

ரீதியான உலகில் சனத்தொகை கூடிய பிரதேசங்கள், சனத்தொகை குறைந்த பிரதேசங்கள், உலகின் 10 மில்லியன் நகரங்கள்

போக்குவரத்து - திரான்ஸ் சைபீரியன், புகையிரத மார்க்கம் முதலியன பிரதான புகையிரத போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, பிரதான கடல் போக்குவரத்து மார்க்கங்கள்

முக்கிய நிகழ்வுகள் - பூமி நடுக்கம், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, உலக மகாநாடுகள்

பிரதான நகரங்கள் - லண்டன், நியூயோர்க், பரிஸ், ஜெனிவா, சியாட்டல், சந்தியாகோ, மும்பாய், கெய்ரோ, புதுடில்லி, மதுரை, ஒசாக்கா, காபுல், ஒட்டாவா, ஹனோய், ஹராரே கேப்டவுன், சிங்கப்பூர்.

இவ்வாறான இடங்கள், நகரங்கள், பிரதேசங்கள் ஆகியவற்றை உலகத்தேசப்படத்தில் குறித்துப் பெயரிடப்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

## உலக தேசப்படத்தில் குறிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

தேசப்படப் புத்தகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறங்கள், குறியிடுகள் உள்ளன. அவற்றைப்பற்றி தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| உ- ம்:- | நகரம் | சிவப்பு நிறம் |
| | மலைத்தொடர் | கபில நிறம் |
| | நதி, நீர்நிலை, கடல் | நீல நிறம் |
| | வெப்பம், வெப்பப்பிரதேசம் | கடுஞ்சிவப்பு |
| | காட்டுப் பிரதேசம் | பச்சை, இளம்பச்சை |
| | சனத்தொகை கூடிய பிரதேசம் | சிவப்பு நிறம் |
| | சனத்தொகை குறைந்த பிரதேசம் | மஞ்சள் நிறம் |
| | வெப்ப நீரோட்டம் | பாய்ந்து வரும் திசை சிவப்பு அம்புகுறி |
| | குளிர் நீரோட்டம் | பாய்ந்து வரும் திசை நீல நிற அம்புக்குறி |

தேசப்படங்களில் மலைத்தொடர், நதி, எல்லைக் கோடு ஆகியவற்றில் பெயர் முறையே மலைத்தொடர் வழியாக, நதி எல்லைக்கோடு நீளமாக எழுத வேண்டும். நகரம், நிலையம் இடம் பிரதேசம் ஆகியன எப்போதும் கிடையாக எழுதுவது சாதாரணமான தன்மையாகும். தேசப்படப் புத்தகத்தை நன்றாக அவதானித்து உங்கள் விளக்கங்ளை மேலும் விருத்தி செய்து கொள்ளவும்.

## உலகப்படத்தில் குறிக்கும் போது ஏற்படும் தவறுகள்

உலகப்படத்தில் குறிக்கும் போது ஏற்படக்கூடிய குறைபாடுகள் அநேகமானவற்றை அறிந்து கொள்ள முடியும்.

உ - ம்
- நகரத்தை குறிக்கும் போது சிவப்பு நிறப் புள்ளியை குறிப்பிட்ட இடத்தில் இடாமை.
- கரையோரப் பிரதேசங்களில் உள்ள நகரத்தை கடற்பிரதேசத்தில் குறித்தக் காட்டல்.
- நதிகளை வரையும் போது கடலுடன் கிளைநதிகளை பிரதான நதிகளுடன் தொடர்புபடுத்தாது விடுதலும்.
- நதியின் ஆரம்பமும் முடிவும் ஒரே அளவான கோடால் வரைந்து காட்டல் (நதியின் ஆரம்பத்தில் மெல்லிய கோடாக அமைதல் அவசியம்).
- நாடு, பிரதேசங்களைக் குறிக்கும் போது எல்லைக்கு வெளியே குறித்தல் (நாடுகளில் எல்லைகள் பிரிக்கப்பட்டுள்ள படத்தில் இத்தகைய பிரச்சினை எழாது).
- குறிப்பிட்ட பிரதேசத்தில் எழுத்துக்களைக் குறிக்க இடப்பற்றாக்குறை ஏற்பட்டால் அதற்கு தூரத்தில் எழுதி அம்புக்குறியால் காட்டலாம். அம்புக்குறியின் முனை குறிப்பிட்ட பிரதேசத்தையோ/ நாட்டையோ காட்டி நிற்க வேண்டும். சிலர் பெயரின் அருகில் அம்புக்குறியின் முனையைக் குறித்துக் காட்டுவர். இது தவறானதாகும்.